உ

ஸ்ரீ சிவத்துணைமயம்





### சிவன்மலை கிராமம், அருள்மிகு ஸ்ரீ நல்லமங்கை அம்பாள் உடனமர்

# ஸ்ரீ பட்டாலி பால்வெண்ணீஸ்வரர் சுவாமி திருக்கோவில்

## 26 ஆம் ஆண்டு தனுர்மாத அபிஷேக ஆராதனை விழா அன்னதான அழைப்பிதழ்

மெய்யன்புடையீர் !

நிகழும் மங்களகரமான ஹேவிளம்பி வருடம் தை மாதம் 1 ஆம் நாள் (14.01.2018) ஞாயிற்றுகிழமை காலை 9.00 மணிமுதல் ஸ்ரீ பட்டாலீஸ்வரர் திருக்கோவிலில்

உயர்திரு. S. **செல்வக்குமார சின்னையன்** B.Sc., B.L., M.A., M.P., ஈரோடு பாரளுமன்ற உறுப்பினர்

உயர்திரு. **உ. தனியரசு** M.A., MLA., காங்கயம் சட்டமன்ற உறுப்பினர், ஆகியோர் தலைமையில்

அபிஷேக ஆராதனையும், தனுர்மாத பூஜை பூர்த்தியும், பொங்கல் பூஜையும் பகல் 12.00 மணிமுதல் அன்னதானமும் நடைபெறும். அது சமயம் பக்த பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டு அருள்மிகு எம்பெருமானின் திருவருளுக்கு பாத்திரராகும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்

**மா. கண்ணதாசன்** M.A., M.Phil.,
உதவி ஆணையர் /செயல் அலுவலர், அ/மி சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், சிவன்மலை

**எஸ்.வி. ஹர்சினி** B.Sc., B.L.,
தக்கார்/உதவி ஆணையர்

**பட்டாலி கிராம பொதுமக்கள்**

---

சிவநேயச்செல்வர்களே !

ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு எல்லாம் வல்ல சிவபெருமான் கோவில் கொண்டு எழுந்தருளிய புண்ணிய ஸ்தலங்கள் பலவற்றுள் காங்கேய நாட்டில் சிவன்மலை அடிவாரத்திற்கும் மேற்புறமாக வடதிசை பாதையில் சுமார் 1 மைல் தொலைவில் உள்ளது ஸ்ரீ பட்டாலி பால்வெண்ணீஸ்வரர் சுவாமி திருக்கோவில்.

## கோவிலின் சிறப்புக்கள் :

"கோயில் விளங்க குடி விளங்கும்" எனும் சான்றோர் வாக்கிற்கிணங்க பழங்கால சோழ மன்னர்களால் கட்டப் பெற்றது. 32 கல்வெட்டுக்கள் உள்ள திருக்கோயில். கொங்கு மண்டலத்தில் காங்கேய நாட்டில் உள்ள 12 சிவாலயங்களில் ஒன்றான பட்டாலியூர் என்னும் திவ்ய சேத்திரத்தில் ஸ்ரீ நல்லமங்கை அம்பாள் சமேதராக அருளாட்சி செய்கிறார் அருள்மிகு ஸ்ரீ பட்டாலி பால் வெண்ணீஸ்வரர். சுவாமி இங்கு பல திருவிளையாடல்கள் நிகழ்த்தியுள்ளார். காரணம் விளங்கக்கூடிய சிவாசலபதி பெருமானுக்கு தாய், தந்தையாகவும் இருந்து அருள்பாலிக்கிறார்கள். மேலும், இங்கே முருகப் பெருமான் ஆறுமுக சுப்பிரமணியராக அற்புதக்காட்சி தருகிறார். துர்க்கை அம்மன் அழகிய திருக்கோலத்தில் தனி சன்னதியில் அருள்பாலிக்கிறார். கால பைரவர் மிகவும் சக்தி வாய்ந்த நிலையில் அஷ்டமி அன்று வழிபாடு செய்பவர்களுக்கு எல்லா நிறை செல்வங்களையும் தந்திடுவார். **அருணகிரி நாதர் பாடல் பெற்ற சிறப்பு ஸ்தலமாகும்.** பிரதி மாதம் சஷ்டி, பிரதோஷம், அஷ்டமி, பௌர்ணமி பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த சிவாலயத்திற்கு கடந்த 14.11.2011 அன்று பாலாலயம் அமைக்கப் பெற்று திருப்பணி வேலைகள் நடைபெற உள்ளது. மிகவும் பழமை வாய்ந்த சிவாலயத்திற்கு திருப்பணி செய்வது மிக மிக புண்ணியமான ஒன்றாகும்.அன்பர்கள் மிக மிக உயர்ந்த உள்ளத்தோடு தாராளமாக பொருளுதவி செய்து சிவபுண்ணியம் பெற்று சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடு இனிது வாழ அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**குறிப்பு : கொடுமுடி தீர்த்தம் செல்வது மார்கழி மாதம் 29 ஆம் நாள் (13.01.2018) சனிக்கிழமை.**

மேற்படி அபிஷேகம், அர்ச்சனைக்கு பொருள் உதவி செய்யும் அன்பர்கள் முன்னதாகவே சேர்க்க வேண்டுகிறோம்.